# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

STC.No. 258/2025 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : பிரபாகரன் ( புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : மெய்யப்பன் |
| Village | : பொந்துகம்பட்டி |
| Taluk | : வாடிப்பட்டி |
| District | : மதுரை |
| Age | : 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026

(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் பெயர் தெரியாது. அவர்களை சம்பவத்தன்று பார்த்துள்ளேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 7.00 மணியளவில் என் மூத்த மருமகள் குகனேஸ்வரி போட்டித் தேர்வுக்காக சென்று பரளியில் பேருந்திலிருந்து இறங்கியவரை நான் எனது இருசக்கர வாகனத்தில் அழைத்து வருவதற்காக சென்று பரளி, அய்யங்கார் பேக்கரி அருகே சாலையின் வலது பக்கம் நின்று கொண்டிருந்தேன். அப்போது 7.00 மணியளவில் என் மருமகள் சாலையில் இடது பக்கம் இறங்கி நான் நிற்கும் பகுதிக்கு வரசொல்லி கொண்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த ஆஜர் எதிரிகள் என் மீது மோதிவிட்டார்கள். எதிரிகள் வேண்டுமென்றே என் மீது மோதியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் நான் புகார் கொடுத்தேன். மேற்படி எதிரிகளின் வாகனம் மோதி கீழே விழுந்ததில் என் பின் பக்க தலையில்

சாதாரண காயம் ஏற்பட்டிருந்தது. நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரிக்க வாக்குமூலம் எழுதிக் கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) நான் தற்போது எதிரிகளோடு சமாதானமாகிவிட்டதால் சமூகம் நீதிமன்றத்தில் நான் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சமாதான மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த சமாதான மனு அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) எனவே நான் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 21.12.2024ம் தேதி இரவு 7.00 மணிக்கு நான் வழக்கம்போல் என் மருமகளை கூப்பிடுவதற்காக இருசக்கர வாகனத்தில் பரளி பஸ் ஸ்டாப்பில் உள்ள அய்யங்கார் பேக்கரி அருகே வண்டியை நிறுத்திவிட்டு ரோட்டில் நடந்து சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது திடீரென இருசக்கர வாகனத்தில் வந்த ஆஜர் எதிரிகள் இருவரும் என்னைப் பார்த்து ரோட்டில் ஒழுங்கா போக மாட்டியா என்றும், அசிங்கமாகவும் பேசி திட்டினார்கள் என்றால் சரியல்ல. பின்னர் நான் எனது வண்டியின் அருகில் சென்று எதிரிகளை பார்த்தபோது, எதிரிகள் என்னிடம் என்னடா முறைக்கிறாய் என்று அசிங்கமான வார்த்தையால் திட்டி அவர்கள் ஓட்டி வந்த வண்டியைக் கொண்டு என் மீது மோதி என்னை கீழே தள்ளி இருவரும் வந்து கையால் என் முகம், தலை, காது ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்தார்கள் என்றால் சரியல்ல. இதைப் பார்த்த எனது மருமகள் குகனேஸ்வரி மற்றும்

கண்ணன் ஆகியோர் விலக்கிவிட்டபோது எதிரிகள் என்னைப் பார்த்து அசிங்கமாக பேசி உன்னை கொலை பண்ணி போட்டிருவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளோடு சமாதானமாகிவிட்டதாலும், எதிரிகள் கேட்டுக் கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.16 15:13:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No 258/2025 LW- 5 PW- 2

S.T.C.No.

| | |
|---|---|
| Name | : வெள்ளிர் அழகன் (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : கருத்தழகன் |
| Village | : தேத்தாம்பட்டி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 42/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026

(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. சுமார் 4, 5 மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் எங்கள் வீட்டின் அருகில் வைத்து நத்தம் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரி மூக்கன் என் அண்ணன், அழகன் என் தம்பி ஆகியோர் சண்டை செய்தது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள். பின்னர் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 22.12.2024ம் தேதி மாலை 5.15 மணிக்கு நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த தங்கவேல் என்பவரும் சம்பவ இடத்தில் இருந்தபோது நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் கையொப்பம் செய்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் சகோதரர்கள் என்பதாலும், எதிரிகள் கேட்டுக் கொண்டதாலும் வெள்ளை பேப்பரில் கையொப்பம் செய்ததாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :** இல்லை

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.16 15:13:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

STC.No. 258/2025 Addl.W 1 PW- 3

| | |
|---|---|
| Name | : கணேஷ்பாண்டியன் (தலைமை காவலர்) |
| Father's/Husband's Name | : ராஜாமணி |
| Village | : நத்தம் காவல் நிலையம் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 39/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of March 2026

( 1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் அ.சா.1, ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாகி சமாதான மனு தாக்கல் செய்து பிறழ் சாட்சியாகிவிட்டதாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் என்பவர் பணி மாறுதலாகி சென்றுவிட்டதாலும், அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் ஆவணங்களைப் பார்த்து சாட்சியம் அளிக்க அனுமதி கோரி அதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 22.12.2024ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் என்பவர் நத்தம் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசனை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா, பொந்துகம்பட்டியைச் சேர்ந்த மெய்யப்பன் மகன் பிரபாகரன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 16.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக் கேற்ப நத்தம்

காவல்நிலைய குற்ற எண். 683/2024 சட்டபிரிவுகள் 296(பி), 115(2), 351(2) BNSன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **( முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2. புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நத்தம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை அவர் தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 22.12.2024ம் தேதி 17.15 மணிக்கு சம்பவ இடமான பரளி, அய்யங்கார் பேக்கரி முன்பாக சாட்சிகள் வெள்ளிர் அழகன் மற்றும் தங்கவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகும். பார்வைமகஜர் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் சாட்சிகள் பிரபாகரன், குகனேஸ்வரி, கண்ணன், ஸ்ரீதர், வெள்ளிர் அழகன் மற்றும் தங்கவேல் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் திண்டுக்கல் அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட பிரபாகரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பிரவீன்குமார் என்பவரை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது 14.02.2025ம் தேதி 296(பி), 115(2), 351(2) BNSன் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் சொன்ன வழக்கின் உண்மை சம்பவம் குறித்து புலன்விசாரணை அதிகாரி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

4. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சார்பு ஆய்வாளர் அ.சா.1டம் புகார் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் சம்பவ இடம் செல்லாமல் வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.16 15:14:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்